

# பாழடைந்த சிராம்பியடி பங்களா

பொன் குலேந்திரன் - கனடா

வடுவூர் துரைசாமி ஐயங்கார், தமிழ்வாணன், சேர் ஆர்தர் கொனன் டொய்லின் ஷெர்லோக் ஹோல்மேஸ் (sherlock Holmes), என்ற கதாப்பாத்திரத்தின் கதைகள். ஜேம்ஸ் ஹட்லி சேஸ் (James Hadley Chase) எழுதிய மர்மக் கதைகள் எனக்கு மிகவும் பிடிக்கும் . அவைகளை வாசித்து நானும் ஒரு துப்பறிவாளனாக வரவேண்டும் என்ற ஆசையை என் மனதுக்குள் பல காலமாக வளர்த்து வந்தேன். அப்போது எனக்கு வயது பதினைந்து. இலங்கையின் வட மேற்கு கரை ஒரத்தில் உள்ள ஊரான புத்தளத்தில் படித்துக்கொண்டு இருந்தேன் இலங்கையின் முதலாவது அரசன் என மகாவம்சம் கூறும் விஜயன் ,இன்றைய கிழக்கு இந்தியாவின் வங்காளதேசப்பகுதியில் லாலா எனும் நாட்டில் தனது தந்தையினால் துரத்தப்பட்டு, தன் 700 நண்பர்களோடு 5ஆம் நூறாண்டில் புத்தளத்துக்கு வடக்கே உள்ள குதிரை மலைக்கு அருகில் உள்ள தம்பலகாமத்தில் வந்திறங்னான் . அவன் இயக்கர்களின் ராணி குவேனியை சந்ததித்து அவளை மணமுடித்து இலங்கையை ஆண்டான் என்கிறது மகாவம்சம் குவேனியின் மாளிகை வில்பத்து வன பூங்காவில் இருந்தாக தொல்பொருள் அராச்சியாளர்கள் கருத்து.

குவேனிக்கு முன் கி மு 1320 யில் குதிரை மலைப் பகுதியை அல்லி ராணி ஆண்டாள் என்கிறது வரலாறு

இந்த வில்பத்து வனபூங்காவுக்கு அருகே புத்தளம் அனுராதபுரம் A12 பெரும் பாதை உள்ளது. அந்த பாதையில் புத்தளத்தில் இருந்து 5 மைல் தூரத்தில் சிராம்பியடி என்ற ஒரு கிராமம் உள்ளது. செழிமையான கிராமம். சிவந்த மண். எங்கு பார்த்தாலும் தென்னம் தோட்டங்கள். இக் கிராமத்தில் சில காப்பிரிக் குடும்பங்கள் வாழ்கிறார்கள். சிராம்பியடியில் இருந்து பெரும் பாதையில் கிழக்கு நோக்கி சென்றால் ஒரு மைல் துரத்தில் வடக்கு பகுதியில் அடர்ந்த காடு. தேற்கில் தென்னம் தோட்டங்கள். காட்டின் ஊடாக வடக்கு நோக்கி ஒரு கிறவல் பாதை செல்கிறது . அந்தப் பாதை எங்கே செல்கிறது என்று என்னோடு படித்த காப்பிரி நண்பன் ஜோசப்பை கேட்டேன். அவன் வீடு சிரம்பியடியில் என்பதால் அவன் அந்த ஊரைச் சுற்றி இருக்கும் காட்டைப் பற்றி அறிந்து வைத்திருப்பான் என்பது என் எண்ணம் அவன் சிங்களம் தமிழ் கலந்து பேசுவான். பைலா பாடல் பாடுவான் . ஆறடி உயரம். திடகாத்திரமான தோற்றம். நான் படித்த பாடசாலையில் அவன் என் பாதுகாவலன். எதையும் துணிந்து செய்வான்.

ஒரு நாள் என்னை தன் வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி அழைத்து இருந்தான். என் பெற்றோரின் அனுமதி பெற்று நான் அவன் அழைப்பை ஒப்புக் கொண்டு என் ரலி சைக்கிளில் அவனின் சிரம்பியடி வீட்டுக்கு போனேன். அது இரண்டு அறைகள், ஒரு குசினி, ஹால் உள்ள ஓலை வீடு. அவன் வீட்டு வளவில் பலா. கொய்யா . வாழை மரங்கள். ஒரு கிணறு. உண்டு

ஜோசப் வீட்டில் எனக்கு நல்ல வரவேற்பு. காரணம் அவனின் தந்தை இமானுவேல் புத்தளம் கச்சேரியில் என் தந்தையின் பியோன்.. அவர்களின் குடும்பம் கத்தொலிக்கர்கள் .ஜோசப்பின் பூட்டனார் கேப்ரியல். கிழக்கு ஆபிரிக்காவில் இருந்து போர்த்துக்கேயர்கள் கற்பிட்டி கோட்டையையும் இன்னும் வேறு சில கோட்டைகளையும் பாதுகாக்க அவரோடு நூறு காப்பிரிகளை இலங்கைக்கு கூட்டி வத்தனர் அந்தக் கூட்டத்தோடு வந்தவர் தான் கேப்ரியல். சிலர் மட்டகளப்பில் வாழ்கிறார்கள் . கேப்ரியல் வழி வந்தவனே சுருட்டை தலைமயிர் உள்ள என் நண்பன் ஜோசப் .

முட்டை அப்பமும், . புட்டும்,. காட்டுச் சேவல் கறியும், பலாப் பழமும் உண்டபின், ஜோசப் என்னை அன்புடன் கேட்டான் ” ராஜ் இன்று இரவு என் வீட்டில் நீ தங்குறாயா”?

“எதுக்கு ஜோசப் தீடீர் என்று கேட்கிறாய்”? நான் அவனைக் கேட்டேன்.

“ ராஜ் உனக்கு தான் துப்பறிய ஆவல் என்று எனக்கு சொன்னாயே. உனக்கு சவாலாக ஒரு பாழடைந்த அடைந்த ஐந்து அறைகள் உள்ள பங்களா காட்டுக்குள் இருக்கு. அந்த பங்களாவுக்குப் போவது கடினம். அந்த பங்களாவில் பேய் இருக்கிற பயத்தில் ஒருவரும் போவதில்லை அந்த பங்களா பற்றி இந்த ஊர் வாசிகள் பல விதமாக பேசுவார்கள்”

“ என்ன பேசுகிறார்கள் “?

“ அந்த பங்களா 100 வருடங்களுக்கு முன் பிரிட்டிஷ் அரசால் வன பாதுகாப்பு அதிகாரிக்கு கட்டிக் கொடுக்கப்பட்டதாம் . அந்த பங்களாவில் பல காலம் தன் குடும்பத்தோடு ஜான் வைட் (John White) என்ற பிரிட்டிஷ் அதிகாரி வாழ்ந்தார். எப்போதும் அவர் குதிரையில் காட்டுக்குள்

துவக்கோடு உலாவி வருவார். அவர் ஒரு குதிரை வண்டி வைத்திருந்தார் . அதை வண்டில்காரன் வண்டியை ஓட்ட அவர் குடும்பம் புத்தளம் போய் வரும். அவருக்கு கீழ் வேலை செய்த நால்வரும் என் இனத்து காப்பிரிகள் . அதில் ஒருவன் வண்டில்காரன். தொட்டத்தையும் கவனித்துக் கொள்வான் . மற்ற மூவரும் அவர் குடும்பத்துக்கும், வன பூங்காவுக்கும் பாதுகாவலர்களாக இருந்தனர். . ஜான் வைட் கண்டிப்பானவர், துவேசம் உள்ள அதிகாரி. தனக்கு கீழ் வேலை செய்தவர்களை அடிமைகளாக நடத்தினார்.."

"அவருக்கு என்ன வேலை ஜோசப்"?

" வனத்தில் உள்ள மிருகங்களையும் பறவைகளையும் பாதுகாப்பது. அவைற்றை ஒருவரும் வேட்டையாட முடியாது யானைத் தந்தம். கருங்காலி, தேக்க மரம், சிறுத்தைத் தோல். மான்தோலும் கொம்பும் திருடி விற்றவர்களை தன் துவக்கால்; சுட்டுக் கொண்டிருகிறார்.. அவரின் நண்பர்கள் அப்போது புத்தளத்தில் இருந்த நீதிபதியும், கற்பிட்டிகோட்டைக்கு பொறுப்பான அதிகாரியும், டாக்டர் ஒருவரும், கச்சேரிக்கு பொறுப்பாக இருந்த அரச அதிகாரி ஆகியோர் . பிரிட்டிஷ்காரர்களான அவர்கள் எல்லோரும் இனத்துவேசம் உள்ளவர்கள். புத்தளத்தில் கடலோரத்தில் உள்ள அரச வீட்டில் கூடிக் குடித்து கும்மாளம் போடுவார்கள் . யானை தந்தம், மான். சிறுத்தை தோல் . கருங்காலி தேக்கு போன்ற விலை உயர்ந்த காட்டு மரங்கள் ஆகியவை வியாபாரம் செய்யும் முகம்மது காசிம் என்ற புத்தள வியாபாரியின் பிசினஸ் ஜோனின் கட்டுப் பாட்டால் பாதிப்டைந்தது"

"பிறகு என்ன நடந்து? கேட்க சுவர்ஸியமாக இருக்கு. மேலும் சொல்லு":

“காசிம் திட்டமிட்டு பணம் கொடுத்து ஜான் வைட்டின் காவலர்களின் உதவியோடு அவர் குடும்பத்தை ஒரு அமாவாசை இரவில், சிராம்பியடி காட்டு பங்களாவில் பூண்டோடு அழித்தார்” .

“ கொலை செய்தவர்கள் பிடி பட்டார்களா ? . அவரக்ளுகு என்ன நடந்தது”?

“ பிரிட்டிஷ் ஆட்சியின் போது ஒரு பிரிட்டிஷ்காரன் குடும்பம் கொலை செய்யப்பட்டால் விளைவு என்ன என்று உனக்குத் தெரியும் தானே காதரும் என் இனத்து காப்பிரிகள் நால்வரும் தூக்கில் இடப் பட்டார்கள்

“ பங்களாவுக்கு என்ன நடந்தத”?:

“அதன் பின் ஒருவரும் அந்த பங்களாவில் வாழவில்லை. அந்த பங்களாவில் ஜான் வைட் குடும்பத்தின் ஆவிகள் இருப்பதாகவும் பலர் ஊரில் .சொல்லுகிறார்கள்.அனால் ஆவிகளை ஒருவரும் காணவில்லை. மின்சாரம் வசதி இல்லத அந்த வீட்டில் இரவில் விளக்கு எரிவதாகவும், ஒரு வகை நாற்றம் அந்த பாழடைந்த பங்களாவில் இருந்து வீசுவதாகவும் சில சமயம் சிரிப்பு சத்தம் கேட்பதாகவும் இந்த ஊர் சனங்கள் பேசிக் கொள் கிறார்கள் . இன்று இரவு நீரும் நானும் அந்தப் பங்களாவுக்குப் போய் அங்கு என்ன நடக்குது என்று பார்ப்போமா.? சைக்கிளில் அங்கு போக அரை மணித்தியாலம் எடுக்கும் ஒருவரும் பயத்தில் அந்த பங்களாவுக்கு இதுவரை போனதில்லை?, ஜோசப் சொன்னான்

ஜோசப் என்னைக் கேட்டது எனக்கு சவாலாக அமைந்தது . வீரம் பேசிய நான் ஒப்புகொண்டேன்.

****

அன்று அமாவாசை. இரவு ஒன்பது மணிக்கு தொடங்கிய காற்றும் மழையும் விட்டபாடில்லை.

“எங்கள் இருவரினதும் றலி சைக்கிள்களை எடுத்துக்கொண்டு பங்களா நோக்கி இரவு போசனத்துக்குப் பின் புறப்பட்டோம். இருவர் கைகளிலும் ஐந்து பட்டரிகள் போட்ட டோர்ச் லைட்டுகள். என் சைக்கில் டைனமோ வேலை செய்யவில்லை. மழையும் காற்றுமாக இருந்தபடியல் . இருவரும் றெயின் கோட்டையும் தொப்பியையும் மாட்டிக் கொண்டோம் சுவரில் இருந்த கடிகாரம் இரவு பதினொன்றே காட்டியது.

வெளியில் ஒரே கும்மிருட்டு. தவளைகளின் தாளவாத்தியக் கச்சேரியில் சில் வண்டுகள் தொடர்ந்து மொர்ஸிங் வாசித்துக் கொண்டிருந்தன. அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக சில மின்மினி பூச்சிகள் . அடிக்கடி தோன்றிய மின்னலும், இடியும் எங்களுக்கு வழி காட்டத் துணையாக இருந்தன. ஏற்றத்தில் மிதிப்பது கடினமாக இருந்தது. யாரோ பின்னுக்கு இழுப்பது போன்ற ஒரு பிரமை எனக்கு . றெயின் கோர்ட் பெல்டின் ஒரு முடிவு சைக்கிளின் பின் சக்கரத்தில் சிக்கிக்கொண்டது. சரி செய்தேன். அந்தப் பங்களாவுக்கு சைக்கிலில் போக வேறு பாதையில்லை என்று ஜோசப்புக்குத் தெரியும். பாதையில் சேறு இருந்த படியால் இருபது அடிக்கு சைக்கிலை தள்ளிக்கொண்டு போனோம் . அதன் பின் ஒரு சிறு ஏற்றம். துணிந்து, கிரவல் கற்கள் நிரம்பிய ஏற்றத்தில் மிதித்தோம் . கிரவல் பாதை ஓரத்தில் ஒரு ஆலமரம் அதை நெருங்கியவுடன் ஊ ஊ ஊ.. ஜோசப் என்ற சத்தத்துடன் ஒரு சுழிக்காற்று வீசியது. அதைத் தொடர்ந்து மின்னலும் இடியும். மின்னல் வெளிச்சத்தில் முழு

ஆலமரமும் ஒரு பிசாசைப் போல் எங்கள் கண்களுக்குக தோற்றமளித்தது

“ ராஜ் எனக்கு  பயமாக இருக்கு. திரும்பி வீட்டை போவோமா”? ஜோசப் கேட்டான்

”பைத்தியக் கதை பேசாதே. இவ்வளவு தூரம் வந்திட்டோம் முன் வைத்த காலை  நான் பின் வைக்க மாட்டேன்” என்றேன் நான் குளிரில் நடுங்கிய படி.

“இன்னும் பங்களாவுக்கு சில யார் தூரம் தான்  இருக்கு. ராஜ் அதோ பார்  தெரிகிறது  பங்களா. அதென்ன அங்கு  விளக்கு எரிகிறது பார்த்தாயா? அது வைட் குடும்பத்தின் ஆவிகளின் விளையாட்டு தான். ஊர்  சனங்கள் சொன்னது சரி தான்  போலத் தெரியுது” என்றான் பயத்தொடு ஜோசப்.

“சும்மா பேசாமல் பயப்படாமல் வா ஜோசப்”

நான் பங்களாவின் முன் தோட்டத்தை டோர்ச் அடித்து ஒரு கண்ணோட்டம் விட்டேன். நீண்ட 8 செ.மீ. நீளம் உள்ள வெள்ளை முட்கள் உள்ள விசில் முள் மரம் பங்களாவின்  வேலியில் வளர்ந்து இருந்தன.

ஒரு மலர் செடிகளையும் நான் காணவில்லை அதற்கு பதிலாக  ஒரே அடர்த்தியயாக வளர்ந்த செடிகள். அந்த  செடிகளின் இலைகளை எடுத்து கசக்கி மணந்து பார்த்தேன்  ஒரு மயக்கும்  புதுமையான வாசனை.  அந்த மணத்தில் இருந்து அவை போதை ஊடும் கஞ்சா செடிகள் (cannabinoids) எனும் வேதிப் பொருள் குழுமத்தை சேர்ந்தசெடி என்பதை உணர்ந்தேன் . இந்த செடியில்  இருந்து  உள,

உடல் விளைவுகளை ஏற்படுத்தக் போதை மருந்து தயாரிக்கலாம் என்று தாவர இயல் பட்டதாரியான என் மாமா சொன்னது என் நினைவுக்கு வந்தது. சில இலைகளை கொய்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டேன்

"நான் முன்னுக்கு போறன் ஜோசப், நீ என் பின்னால் பேசாமல் வா " என்றேன் நான்

ஜன்னல்கள் எல்லாம் பேப்பர் ஒட்டி இருந்தது. உள்ளே என்ன நடக்கிறது என்று பார்க்க முடியாது இது ஆவிகளின் வேலை இல்லை என்று எனக்கு புரிந்தது

நான் டோர்ச் அடித்து பார்தபோது பழைய முன் கதவில் ஒரு ஓட்டை தெரிந்தது அதன் ஊடாக பங்களாவுக்குள் என்ன நடக்குது என்று பார்த்தேன் .

நான்கு பேர் இரு பெரிய பானைகளில் எதோ அடுப்பில் காச்சுவது தெரிந்தது. அவர்களுக்கு பக்கத்தில் பல போத்தல்கள்.. ஒருவர் போத்தல்களில் பானைகளில் காச்சியதை நிறப்புவது தெரிந்தது . மற்றவர் போத்தல்களை பெட்டிக்குள் அடுக்கினார் . எனக்கு உடனே பாழடைந்த பங்களாவின் மர்மம் துலங்கியது

"என்ன ராஜ் இந்த பங்களாவில் கள்ளச் சாராயம் காச்சுகிறார்ககள் போல தெரிகிறது இந்த பங்களாவில் வைட் குடும்பத்தின் ஆவிகளின் நடமாட்ம் இல்லை . இது முழுப் பொய் வதந்தி . தங்கள் தொழிலுக்கு சாதகமாக கதை கட்டி விட்டிருக்கிறார்கள்" என்றான் ஜோசப்.

.

“அது மட்டுமல்ல ஜோசப் இந்த பங்களா தொட்டத்தில்  கஞ்சா செடி வளர்கிறார்கள் . இதுக்குத்  தான் இந்த பாங்களாவில் ஜோனின் குடும்பத்தின் ஆவிகள் உலாவுது என்று வதந்தி பரப்பி இருக்குறார்ள் உள்ளே இருக்கிற கூட்டம்  . எல்லாம் தங்கள்   வருமானத்துக்கு தான்” என்றேன் நான்  .

மறு நிமிடம்  நாங்கள் இருவரும் அங்கு நின்றால் ஆபத்து என்று வீடு  நோக்கித் திரும்பினோம் .

***

நான் என் புத்தளம் வீட்டுக்கு திரும்பியதும் முதல் செய்த  காரியும் என் அப்பாவுக்கும் அவரின் நண்பர் இன்ஸ்பெக்டர்  பெரேராவுக்கு நடந்த முழு கதையும் சொல்லி நான் கொய்த கஞ்சா செடி  இலைகளையும் அவரிடம் கொடுத்தேன். அவருக்கோ நடந்தை கேட்க  ஆச்சரியமாக இருந்தது. அடுத்த கணம் இரு போலீஸ்   ஜீப்புகள் அந்தப் பாழடைந்த பங்களா நோக்கி விரைந்தன .

”மகன்  நீ நினைத்தை சாதித்து விட்டாய். . நாளை  உன்னையும் உன் நண்பன் ஜோசப்பையும்   அல்பிரேட் கிட்ச்கோக்கின்  படத்துக்கு அழைத்து செல்கிறேன்”, என்றார் என் அப்பா .

*****

( யாவும் புனைவு)